# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**********************

## இந்தியக் கடற்படைக் கப்பல் டெல்லி கொழும்பிலிருந்து புறப்பட்டது

இந்தியாவின் சுதேசிய தயாரிப்பான முதலாவது நாசகாரி கப்பலான ஐஎன்எஸ் டெல்லி தனது வெற்றிகரமான நல்லெண்ண விஜயத்தினை நிறைவு செய்து 2023 செப்டெம்பர் மூன்றாம் திகதி கொழும்பிலிருந்து புறப்பட்டது.

2. இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்கள் 2023 செப்டெம்பர் 2ஆம் திகதி ஐஎன்எஸ் டெல்லி கப்பலில் விருந்துபசாரம் ஒன்றை நடத்தி இருந்தார். இந்த விருந்துபசாரத்தில் சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த அதேவேளை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை ஆயுதப்படைகளின் தளபதிகள் மற்றும் ஏனைய பல்வேறு துறைகளையும் சேர்ந்தோரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இதன்போது இலங்கை அரசின் பயன்பாட்டுக்காக, தயார் நிலையில் உள்ள HADR மருத்துவ (ஆரோக்கிய மைத்ரி) தொகுதி ஒன்றும் உயர் ஸ்தானிகரால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டது.

3. இந்நிகழ்வில் உரை நிகழ்த்தி இருந்த கௌரவ சபாநாயகர் அவர்கள், குறித்த விசேட மருத்துவ தொகுதிக்காக இந்திய அரசாங்கத்திற்கு நன்றியினை தெரிவித்திருந்தார். அத்துடன் 2022 ஆம் ஆண்டில் இந்தியாவால் முன்னொருபோதும் இல்லாத வகையில் வழங்கப்பட்ட பாரிய ஆதரவையும் அவர் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்தியிருந்தார். இந்த நிகழ்வில் தனது கருத்துக்களை முன்வைத்திருந்த உயர் ஸ்தானிகர் அவர்கள் கடல் மார்க்கமாக மிகவும் கிட்டிய அயல்நாடுகளாக இருக்கும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் வலுவான

பிணைப்பின் குறியீடாகவே ஐஎன்எஸ் டெல்லியின் இலங்கை விஜயம் அமைந்திருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

4. இந்த விஜயத்தின் ஒரு பகுதியாக ஐ.என்.எஸ் டெல்லி கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் அபிஷேக் குமார் அவர்கள் மேற்கு கடல் பிராந்திய தளபதி அவர்களை சந்தித்திருந்தார். அத்துடன் உயிர் தியாகம் செய்த இந்திய அமைதிகாக்கும் படையினரின் நினைவுத்தூபியிலும் அவர் அஞ்சலி செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமல்லாமல் கப்பலின் சிப்பந்திகள், யோகா மற்றும் கரையோரத்தை சுத்தமாக்கும் பணிகள் போன்றவை உள்ளிட்ட பல்வேறு பணிகளை இலங்கை கடற்படையினருடன் இணைந்து மேற்கொண்டிருந்தனர். அதற்கு மேலதிகமாக 2023 செப்டெம்பர் மூன்றாம் திகதி கப்பல் புறப்பட்டதன் பின்னர் கொழும்புக்கு அப்பால் உள்ள கடற்பரப்பில் கடல் மார்க்க ஒத்துழைப்பு பயிற்சிகளும் இடம்பெற்றிருந்தன.

5. மேலும், இக்கப்பலானது 2023 செப்டம்பர் முதலாம் திகதி பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பார்வையிடுவதற்காக திறந்து வைக்கப்பட்டிருந்தது. இலங்கை கடற்படையினருக்கான பல்வேறு சந்திப்புகள், நிபுணத்துவ உரையாடல்கள், கப்பலுக்கான விஜயங்கள் ஆகியவையும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

6. 2023 ஜூலை 28ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையில் இந்திய கடற்படை கப்பலான கஞ்சார் தனது செயற்பாடுகளின் ஒரு பகுதியாக திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் வளர்ச்சியும் என்ற சாகர் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இரு அயல்நாடுகளையும் சேர்ந்த நட்புமிக்க கடற்படையினரிடையில் தோழமை மற்றும் இயங்குதிறன் ஆகியவற்றினை மேலும் ஒன்றிணைக்கும் நோக்குடனேயே இந்திய கடற்படை கப்பல்கள் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு வருகின்றன.

****************************

**கொழும்பு**
**3 செப்டெம்பர் 2023**